| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 05.03.2026 | |
| STC No. 33/2024 | |
| சாட்சி :PW1 | |
| பெயர் : திருமதி. அபிநயா | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. நாகராஜ் | தொழில் : |
| கிராமம் : தங்கமாப்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 21/2026 |
| ( எதிரிகள் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும், அவர்கள் எனது உறவினர்கள். ஆஜர் எதிரியாகிய எனது சித்தப்பா சக்திவேல் எனது மாமாவின் பெயரிலுள்ள அட்ரஸை பயன்படுத்தி லாரி ஓட்டிக்கொண்டிருந்தார். அந்த விபரத்தை நாங்கள் தான் எனது மாமாவிடம் சொன்னதாக நினைத்துக்கொண்டு 27.05.2023 ம்தேதி மாலை 05.00 மணியளவில் எதிரிகள் அனைவரும் எனது வீட்டிற்கு வந்து எதிரிகள் சக்திவேல், முருகேசனும் எதற்காக அட்ரஸை பற்றி சொன்னீர்கள் என்று சொல்லி கோப்பட்டு அவர்கள் இருவரும் எனது அம்மாவை அடிக்க வந்தார்கள். நான் தடுத்த போது என்னை எதிரி சக்திவேல் செருப்பால் எனது கண்ணத்தில் அடித்தார். எனது தம்பி தடுக்க வந்த போது அவரை பிடித்து வைத்து தடுத்தால் உங்களது குடும்பத்தை கொன்றுவிடுவேன் என்று எதிரிகள் அனைவரும் சேர்ந்து மிரட்டினார்கள். எனது அம்மாவை சக்திவேல், முருகேசன் சேர்ந்து கழுத்தை நெறித்து கொலை செய்ய முயற்சித்தார்கள். மற்ற எதிரிகள் அனைவரும் சேர்ந்து கட்டையால், செருப்பால் அடித்தார்கள். சம்பவ சமயத்தில் நான், எனது அம்மா மற்றும் தம்பி ஹர்சன் ஆகியோர்கள் மட்டும் தான் இருந்தோம். எங்கள் வீடு தனியாக இருந்ததால் அக்கம், பக்கத்தில் யாரும் இல்லை. பின்னர் எனது அண்ணன் லெட்சுமணணுக்கு போன் செய்து தகவல் சொல்லி அவர் வந்து எங்களை மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். நானும், எனது தம்பியும் புறநோயாளியாக சிகிச்சை பெற்றோம். எனது அம்மா உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். அதன்பின்பு

நான் காவல்நிலையம் வந்து புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2. 1ம் எதிரி எனதுசொந்தசித்தப்பா என்றால் ஆமாம். 3ம் எதிரி எனது பெரியப்பா என்றால் ஆமாம். 2ம் எதிரி என்பவர் சக்திவேல் மனைவி என்றால் ஆமாம். 4ம் எதிரி என்பவர் 3ம் எதிரியின் மனைவி என்றால் ஆமாம். 5ம் எதிரி என்பவர் முருகேசனின் மனைவி என்றால் ஆமாம். 27.05.2023 ம்தேதி என்றால் ஆமாம். புகார் எப்போது கொடுத்தேன் என்றால் 28.05.2023 ம்தேதி இரவு 08.30 மணிக்கு கொடுத்தேன். சம்பவம் நடந்தது 27.05.2023 ம்தேதி மாலை 05.30 மணிக்கு நடந்தது. திருச்சியில் உள்ள கௌசல்யா என்பவரை தெரியும். அவர் முருகேசன் என்பவரின் மகள் என்றால் ஆமாம். கௌசல்யா கணவர் பாண்டி, ராமர், லட்சுமணன் ஆகியோர்கள் உடன் பிறந்த அண்ணன், தம்பிகள் என்றால் ஆமாம். அவர்கள் எனது அம்மாவிற்கு சொந்த சித்தப்பா மகன்கள் ஆவார்கள் என்றால் ஆமாம். கௌசல்யா என்ற பெயரில் திருச்சி லாரி ஸ்டாண்டு வைத்து அவர்கள் வீட்டில் நடத்தி வந்தார்கள் என்றால் ஆமாம். தற்போது மூன்று நபர்கள் பங்கு பிரித்து தனித்தனியாக உள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியாது. சம்பவம் வீட்டிற்குள் நடந்ததா என்றால் ஆமாம்.

3. புகார் நான் தான் எழுதிக்கொடுத்தேன் என்றால் ஆமாம். அதில் எனது அம்மா, தம்பி, அப்பா நாகராஜ் இருந்ததாக எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சம்பவத்தின் போது எனது அப்பா இல்லை. எனது அப்பா இருந்ததாக சொல்லி புகார்எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டு அருகே 5 வீடுகள் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடக்கும் போதுபக்கத்தில் ஆட்கள் இருந்தார்களா என்றால் அது பற்றி தெரியாது. லட்சுமணன், பூவன், துளசி, ராமன் ஆகியோர்கள் அம்மாவின் தாய்மாமன்கள் என்றால் ஆமாம். மற்ற மூவரும் மகன்கள் என்றால் ஆமாம். சாட்சியின் ஊர் புதுவாடிபுதூர் என்றால் ஆமாம். எங்கள் ஊரிலிருந்து புதுவாடிபுதூர் 4 கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் நடந்த இரவே மருத்துவமனையில் சேர்ந்தோம். நானும், எனது தம்பியும் புறநோயாளியாக இருந்தோம், எனது அம்மா உள்நோயாளியாக இருந்தார். 28.05.2023 ம் தேதி 08.10 மணிக்கு சேர்ந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI
Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.
Judicial Magistrate, Manapparai

Date: 05.03.2026

STC No. 33/2024

சாட்சி :PW2

| | |
|---|---|
| பெயர் : திருமதி. மல்லிகா | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. நாகராஜ் | தொழில் : டெய்லர் |
| கிராமம் : தங்கமாப்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 48/2026 |

( எதிரிகள் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்)

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது மகள். ஆஜர் எதிரிகளை தெரியும், அவர்கள் எனது கணவரின் உறவினர்கள். சம்பவத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பு எனது தம்பிவீட்டு அட்ரஸை வைத்து 1ம் எதிரி சக்திவேல் லாரி வாங்கி ஓட்டியது சம்மந்தமாக எனது தம்பிக்கும், எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்து வந்தது. அந்த நிலையில் கடந்த 27.05.2023 ம்தேதி மாலை 05.00 மணியளவில் எதிரிகள் அனைவரும் எனது வீட்டிற்கு வந்து எதற்காக போட்டோ எடுத்து எனது தம்பிக்குஅனுப்பினீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு நான் பேசிக்கொள்ளலாம், விசாரித்துக்கொள்ளலாம் என்று சொல்லிகொண்டு இருக்கும் போது சக்திவேல் எனது வீட்டிற்குள் வந்து எனது குரல்வளை பிடித்து நெறித்தார். அதை கேட்க வந்த அ.சா.1 எனது மகளை 1ம் எதிரி சக்திவேல் செருப்பால் அடித்தார். மற்ற எதிரிகள் குச்சி, கொடிகயிறு ஆகியவற்றை எடுத்து வந்து கரண்ட் வைத்து கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள். எனது மகன் ஹர்சன் விலக்க வந்து போது அவரையும் எதிரிகள் தள்ளிவிட்டார்கள். எங்கள் தனி வீடு என்பதால் அக்கம், பக்கத்தில் யாரும் அருகில் இல்லை. சம்பவத்தை கேள்விபட்டு லட்சுமணன் வந்து எங்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct. Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| |
|---|
| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai |
| Date: 05.03.2026 |
| STC No. 33/2024 |
| சாட்சி :PW3 |

| | |
|---|---|
| பெயர் : திரு. பூவன் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு.ஸ்ரீரெங்ககவுண்டர் | தொழில் : விவசாயம் |
| கிராமம் : புதுவாடிபுதூர் | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 56/2026 |
| ( எதிரிகள் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.2 எனது அக்கா பொன்னு. ஆஜர் எதிரிகளை தெரியும், சுமார் 2 வருடத்திற்கு முன்பு எனது அக்கா தனலெட்சுமி எனக்கு போன் செய்து மல்லிகா வீட்டில் அவரது உறவினர்களுக்குள் தகராறு என்று சொல்லி உடனடியாக பார்க்குமாறு சொன்னார். அதனால் நான் சென்று வீட்டில் சென்று பார்த்த போது சண்டை முடிந்துவிட்டது. அதன்பின்பு மல்லிகா மருத்துவமனைக்கு சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 05.03.2026 | |
| STC No. 33/2024 | |
| சாட்சி :PW4 | |
| பெயர் : திருமதி. துளசி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு.பூவன் | தொழில் : விவசாயம் |
| கிராமம் : புதுவாடிபுதூர் | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 55/2026 |
| ( எதிரிகள் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும்,கொஞ்ச காலத்திற்கு முன்பு எனது அக்கா தனலெட்சுமி எனக்கு போன் செய்து மல்லிகா வீட்டில் அவரது உறவினர்களுக்குள் தகராறு என்று சொல்லி உடனடியாக பார்க்குமாறு சொன்னார். அதனால் நான் சென்று வீட்டில் சென்று பார்த்த போது சண்டை முடிந்துவிட்டது. அதன்பின்பு மல்லிகா மருத்துவமனைக்கு சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.